**நேமுக.எண் 10318/2007/அ1, நாள் : 15.11.2007**

பொருள் : பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம்– மண்டல உதவி இயக்குநர்கள் –பொறுப்பு மற்றும் கடமைகள் –செயல்படுத்த அறிவுரைகள் வழங்கப்படுகிறது

*****

தாங்கள் ———— மண்டல உதவி இயக்குநராக பொறுப்பேற்றமைக்கு எனது அன்பு கலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துடன் உதவி இயக்குநர் பதவிக்குரிய வேலை பட்டியலை ( Job Chart) இணைத்து அனுப்பி வைத்துள்ளேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை தவறாது உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதுடன் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளையும் கவனத்தில் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

- முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தி செயல்படுத்த வேண்டும்
- புகாருக்கு இடமின்றி செயல்பட வேண்டும்.
- மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் நல்லுறவு பேணி பேரூராட்சிகள் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் திட்டங்கள் குறித்த நிலைகளை அவருக்கு அவ்வப்போது விவரித்து அறிவுரைகள் பெற வேண்டும்.
- பேரூராட்சிகளில் முறையற்ற, அளவிற்கு அதிகமான செலவினங்கள் மற்றும் வருவாய் இழப்பை ஏற்படுத்தும் செலவினங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்த, நடவடிக்கை மேற்கொண்டு பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படா வகையில் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அதற்கேற்ப பேரூராட்சிகளில் அவ்வப்போது களப்பணி ஆய்வு மேற்கொள்ளுதல் வேண்டும்.
- பேரூராட்சிகளை ஆய்வு செய்வதற்கென படிவம் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி பேரூராட்சிகளில் ஆய்வு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- செயல் அலுவலர்களுடன் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட வேண்டும்.
- திட்டப்பணிகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக அறிந்து அதன்படி திட்டப் பணிகள் செவ்வனே நடைபெறும் வகையில் செயல்பட வேண்டும்.
- தங்கள் மண்லத்தைச் சேர்ந்த மண்டலச் சேர்ந்த அனைத்து பேருராட்சி பற்றிய அடிப்படை தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை கண்டிப்பாக கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.
- கணினி தொடர்பான அனைத்து வேலைகளையும் (On line monitoring system, E-Tendering, Web site etc.,) முழுமையாக அறிந்து கொள்வதுடன் அதனை முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.
- பல்வேறு இனங்கள் தொடர்பான பருவ வெளியீடுகள் குறித்து அறிக்கையினை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பாக மாதந்திர உத்தேச பயண நிரல் (Tentative Tour Programme) மற்றும் மாதாந்திர நாட்குறிப்பினை (AD’s Diary) தவறாது அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- பேரூராட்சிகள் தொடர்பாக தினசரி நாளிதழில்கள் புகார் ஏதும் வெளிவராத வகையில், பேரூராட்சிகளின் நிலை குறித்து கண்காணிக்கப்பட வேண்டும். அவ்வாறு புகார் ஏதும் வரப்பெறின், அந்நிகழ்வுகளின் மீது விரைந்து ஆய்வு செய்வதுடன், இது குறித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை இவ்வியக்கத்திற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- பேரூராட்சிகள் தொடர்பாக முக்கிய நிகழ்வுகளை உடனுக்குடன் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன், அவரது அறிவுரையின் படி அந்நிகழ்வின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதன் விபரத்தினை இவ்வியக்ககத்திற்கு உடன் தெரிவிக்கப்பட வேண்டும்.

- மாதாந்திர செய்தித்தாள்கள்/ நாளேடுகள்/வாராந்திர பத்திரிக்கைகள் ஆகியவற்றில் தங்கள் மண்டலத்தைச் சார்ந்த பேரூராட்சிகள் தொடர்பான தகவல்கள் ஏதும் பிரசுரிக்கப்பட்டிருப்பின் அதன் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

- பேரூராட்சிகள் இயக்ககத்திற்கும், அரசிற்கும் பாலமாக இருந்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

- பேரூராட்சிகள் நிர்வாகத்தில் சட்ட ஒழுங்கிற்கு எவ்வித பாதகமின்றி, நிர்வாகம் சிறப்புற செயல்பட வேண்டும்.

- தணிக்கைத் தடை நிலுவைகளை நிவர்த்தி செய்தல் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- வரி மற்றும் வரியில்லா இனங்கள் மீதான வசூல் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்வதுடன், இது தொடர்பாக வரித்தண்டலர்களுடன் உரிய ஆய்வுக் கூட்டம் நடத்தி, தக்க அறிவுரை வழங்கி உரிய காலத்திற்குள் நிலுவையின்றி வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் கொள்கை விளக்க அறிவிப்புகள் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றின் மீது தொடர்ந்து காண்காணிப்பு செய்து, செயல்படுத்தி சிறப்பான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- பேரூராட்சிகள் இயக்ககத்திலிருந்து கடந்த ஒரு வருட காலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பல்வேறு நேர்முக கடிதங்களின் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை தொடரப்பட வேண்டும்.

- மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அலுவலர்களால் நடத்தப்படும் அனைத்து கூட்டங்களிலும், தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

- பேரூராட்சிகளுக்கு வருவாய் தரத்தக்க இனங்களை ஆய்ந்தறிந்து, அதனை செயல்படுத்தி பேரூராட்சிகளின் வருவாயினை பெருக்கிட வேண்டும்.

- கடன்கள் மற்றும் முன்பணங்கள் செலுத்துதல் தொடர்பாக ஆய்வு செய்து, கால தாமதமின்றி அதனை உரிய காலத்திற்குள் செலுத்திட ஏதுவாக நடவடிக்கை தொடரப்பட வேண்டும்.

- பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பொது நிதி வேலைகள் தொடர்பாக தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் நிதி விடுவிக்கப்படுதல்/பணி முன்னேற்றம் தொடர்பாக தனிக்கவனம் செலுத்தி ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்.

- அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் மீது சிறப்பு மற்றும் தனிக்கவனம் செலுத்தப்படுவதுடன், இப்பணிகள் சிறப்பாகவும், உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் வகையில் செயல்பட வேண்டும்.
- உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் ஆகியோர்களுடன் அவ்வப்போது ஆய்வுக் கூட்டம் நடத்தி திட்டப் பணிகள் மற்றும் பொது நிதி வேலைகள் முன்னேற்றம் குறித்து விவாதித்து பணிகள் எவ்வித தடையின்றி சீராகவும், விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களது கோரிக்கைகள் மீது விதிமுறைகளின் படி பரிசீலித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- எப்போதும் உதவி இயக்குநர் வசம், கீழ்கண்டுள்ள விவரங்கள் அடங்கிய கையேடு வைத்திருத்தல் வேண்டும்.
    - பேரூராட்சிகள் பற்றிய அனைத்து அடிப்படை தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்கள்.
    - பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்/முன்னேற்றங்கள்/ நிதி தொடர்பான விபரங்கள்
    - பேரூராட்சிகளில் வருவாய் வரத்தக்க இனங்கள் குறித்த விவரம்
    - பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள் குறித்த விவரம் மற்றும் அவர்களது பணி விவரப் பட்டியல் (Job Chart)

மேற்காணும் இனங்கள் மற்றுமின்றி, அவ்வப்போது உயர் அலுவலர்களால் அளிக்கப்படும் அறிவுரைகளையும், மனதில் நிறுத்தி விழிப்புணர்வுடனும், தனிக்கவனத்துடனும் மற்றும் சிறப்புடனும் பணியாற்ற வேண்டுமென அறிவுறுத்துகிறேன்.

தங்கள் அன்புள்ள<br>
**கே.கோபால்**

பெறுநர்

திரு.<br>
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்<br>
மண்டலம்.